பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸு ஐப்பசி மீ 19 வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற.அவ்வல் பிறை 23 (04 - 11 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 227

மங்கள வைபவங்களுக்கு கேற்ப, உடுபுடைவைகள்

RASI

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

★ காஞ்சிபுரம்
★ பெனரிஸ்
★ செவி தஞ்சூர்
★ பாடலி
★ பட்டுவேஷ்டிகள்.
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# மாலைதீவு புரட்சியை முறியடிக்க

# இந்திய பரா துருப்புகள் விரைவு!

## புனே, திருவனந்தபுரத்திலிருந்து புறப்பாடு

கொழும்பு, நவம்பர் 4

மாலைதீவில் நேற்றுக்காலை இராணுவ நடவடிக்கைகள் மூலம் திடீர் புரட்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தப் புரட்சியை முறியடிப்பதற்காக ஆயிரத்து அறுநூறு இந்தியப் பரா துருப்புகள் மாலைதீவு நோக்கி விரைவதாகவும், அவற்றுக்கு உதவியாக இந்திய யுத்தக் கப்பல்களும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் பி. பி. ஸி. நேற்றுமாலை அறிவித்தது.

இந்தத் தகவல்களை அமெரிக்க ராஜாங்க அமைச்சும் உறுதிப் படுத்தியது என லண்டனில் நேற்று இரவு அறிவிக்கப்பட்டது.

இந்தியப் பரா துருப்புக்கள் திருவனந்தபுரத்தில் இருந்தும் புனேவில் இருந்தும் மாலைதீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று தெரிய வந்தது.

இராணுவ நடவடிக்கை மேற்கொண்டவர்களின் பிடியில் மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம் சி கி இருப்பதாகவும் —

மாலைதீவு புரட்சி குறித்து
முன்னர் வந்த செய்திகள் 5 ஆம் பக்கத்தில்

அவருடன் சேர்த்து அவரது அமைச்சர்கள் சிலரும் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருப்பதாகவும் முதலில் வந்த செய்தி ஒன்று தெரிவித்தது.

தலைநகர் மாலேயுக்கு இரண்டு கப்பல்களில் போய் இறங்கிய சுமார் 200 கூலிப்படையினர் அரசுத் துருப்புக்களுக்கு எதிரான தாக்குதலை ஆரம்பித்தனர் என்றும் —

கூலிப்படையினர் இலங்கைப் பிரஜைகள் என்றும் —

அவர்களில் சிலர் தமிழில் பேசினர் என்றும் முதலில் வந்த தகவல்கள் தெரிவித்தன.

அவர்களில் வேறு சிலர் சிங்களம் உட்பட பல மொழிகளிலும் பேசினர் என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி கையூமுக்கு எதிரானவர் என்று கருதப்படும் அப்துல்லா லூத்தாபி எனும் வர்த்தகரே இந்தக் கூலிப்படையினரை தயார் செய்து அனுப்பியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ)

### ★ இலங்கையர் பாதுகாப்பாக இருக்கின்றனர்

கொழும்பு, நவ 4

மாலைதீவில் இலங்கைப் பிரஜைகள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது

இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரிஒருவர் இதனைத் தெரிவித்தார். (ஒ-எ)

### தொடர்ந்து சண்டை

கொழும்பு, நவம்பர் 4

மாலைதீவு தலைநகரில் இன்னும் சண்டை நடப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசு வானொலி, டெலிவிஷன் நிலையங்களைக் கூலிப்படைகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன என்றும் செய்திகள் தெரிவித்தன

தேசிய பாதுகாப்புப்படை அலுவலகத்தைச் சுற்றி சண்டை நடைபெறுவதாகவும் உள்ளே இருக்கும் பொலீஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரை சரணடையும்படி புரட்சி நடத்துபவர்கள் காலக்கெடு விடுத்திருப்பதாகவும் மாலேயில் இருந்து வரும் தொலைபேசித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை நடந்த சண்டையில் அரசுத் துருப்புக்களில் 20 பேர் உயிரிழந்தனர். (உ-எ)

### 2,000 பேர் பணயம்

கொழும்பு நவ 4

புரட்சிகளில் ஈடுபட்டவர்கள் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களைப் பணயக் கைதிகளாக வைத்திருப்பதாகப் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன

பணயக் கைதிகளாக வைக்கப்பட்டவர்களில் அதிகமானோர் உள்ளூர் மீனவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

### யாரிடம் அதிகாரம்?

லண்டன், நவ. 4

சதிப்புரட்சியைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பை யார் ஏற்றுள்ளனர் என்பது குழப்பகரமானதாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஒரு செய்தியின்படி ஜனாதிபதி கையூமும் அமைச்சர்கள் சிலரும் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

இன்னொரு செய்தி, ஜனாதிபதி கையூம் பாதுகாப்பாக மாலேயில் இருப்பதாகக் கூறுகிறது

மாலைதீவு பாதுகாப்பு அமைச்சரும், மற்றொரு அமைச்சரும் அரசின் சில சிரேஷ்ட அதிகாரிகளும் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருப்பதாகவும் —

அரசுத் துருப்புக்கள் சரணடையாவிட்டால் அவர்களைத் தாம் கொலைசெய்யப்போவதாகவும் புரட்சியாளர்கள் மிரட்டி வருகின்றனர்.

### இந்திய விமானம் தரையிறங்கியது!

மாலைதீவுக்கு இந்திய பரா துருப்புகளை ஏற்றிச் சென்ற விமானங்களில் ஒன்று மாலேயில் தரையிறங்கியதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. 1000 துருப்புக்களும் தரையிறக்கப்பட்டன.

### உதவக் கோருகிறார் ரம்பால்

இதனிடையில் — சர்வதேச நாடுகள் மாலைதீவுக்கு விரைந்து உதவவேண்டும் என்று பொது நலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் ஸ்ரீதத் ரம்பால் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (உ-எ)

### அமெரிக்கா, பிரிட்டன் அரசுகளிடம் கோரிக்கை

இராணுவ உதவி அனுப்பும்படி ஜனாதிபதி கையூம் அமெரிக்கா, பிரிட்டன் அரசுகளிடமும் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

எனினும் இக்கோரிக்கை தொடர்பாக இரு நாடுகளின் தரப்பிலும் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பது குறித்துத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (உ)

### அமெரிக்கா ஆராய்வு

வாஷிங்டன், நவம்பர் 4

மாலைதீவு நிலைமை குறித்து அமெரிக்க அரசு இந்திய அரசுடனும், பிரிட்டனுடனும் தொடர்பு கொண்டு ஆராய்ந்து வருகிறது

அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் சார்ள்ஸ் ரெட்மன் இத்தகவலைத் தெரிவித்தார். (உ)

### ★ ஏற்கனவே தப்பியவர்

லண்டன் நவ 4

மாலைதீவு ஜனாதிபதி கையூமைக் கொல்வதற்கு மூன்று தடவைகள் முயற்சி மேற்கொள்ளப்பட்டன. எனினும் அதில் அவர் தப்பி பிழைத்துக் கொண்டார் 1980 இல் இடம்பெற்ற கொலை முயற்சிச் சம்பவத்தில் பிரிட்டிஷ் கூலிப்படையைச்சேர்ந்த 9 பேர் சம்பந்தப்பட்டிருந்தனர்

(6ஆம் பக்கம் பார்க்க)

### அவர்கள் தமிழர்களே!

லண்டன் நவம்பர் 4

தமிழ் கெரில்லாக்களே மாலைதீவில் புரட்சித்தாக்குதலை நடத்தினர் என்று ஐ நாவுக்கான மாலைதீவு தூதுவர் தெரிவித்ததாக பி.பி.சி நேற்று அறிவித்தது

இருநூறுக்கும் குறைவான கெரில்லாக்கள் தானியங்கி ஆயுதங்கள், ரொக்கட்டுக்கள், கிரனேட்டுக்கள் சகிதம் தாக்குதலை நடத்தியதாகவும்—

எனினும் மாலே விமானநிலைய பாதுகாப்பு நிலையம் இன்னும் அரச துருப்புக்களின் கைவசம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

### கற்பிட்டியிலிருந்தே புறப்பட்டனராம்!

மேற்கு கரையோரப் பகுதியான கற்பிட்டியிலிருந்து மூன்று நாட்களுக்கு முன்னர் புறப்பட்ட சுமார் இருநூறு தமிழ்த் தீவிரவாதிகளே மாலைதீவில் தாக்குதல் நடத்தியதாக நேற்று நள்ளிரவு அறிவிக்கப்பட்டது.

இவர்கள் நேற்று அதிகாலை 4 மணிக்கு மாலைதீவில் தரையிறங்கினர்:

மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூமின் அரசினால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் கடந்த எட்டு மாத காலமாக இலங்கையில் தங்கியிருந்து ஆள்திரட்டும் நடவடிக்கைகளை மேற் கொண்டார் என்றும் — கூறப்பட்டது

### இந்திய அமைச்சரவை ஆராய்வு

புதுடில்லி, நவ 4

மாலைதீவில் ஏற்பட்ட திடீர் புரட்சி காரணமாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, நேற்று பீஹார் மாநிலத்துக்கு மேற்கொள்ளவிருந்த ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ★ பிந்திய செய்தி

### கையூம் பாதுகாப்பாக இருப்பதாக அறிவிப்பு

மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூமும், அவரது அமைச்சரவையில் இடம்பெறும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் பாதுகாப்பாக இருப்பதாக இன்று அதிகாலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன

அரசபடைகள் அவர்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

சுமார் ஆயிரபேரைக்கொண்ட அரசபடைகளுக்கும், சுமார் இருநூறுபேரைக்கொண்ட புரட்சிப்படையினருக்கும் இடையில் பல இடங்களில் தொடர்ந்து மோதல் இடம்பெற்று வருவதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. [உ]

## விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படை

# அமைதிப்படை சென்றி மீது புதனன்று அதிரடித் தாக்கு!

### கனகராயன்குளத்தில் சம்பவம்

கொழும்பு, நவ: 4

கனகராயன் குளத்தில் அமைதிப்படையின் சென்றி ஒன்றின் மீது விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படை அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியிருக்கிறது:

இந்தத் தாக்குதலில் ஐந்து ஜவான்கள் உயிரிழந்ததாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் 6 பேர் உயிரிழந்ததாகவும் இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது:

கறுப்பு உடையணிந்து ட்ரக ஒன்றில் வந்த விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படை ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது:

கடந்த புதன்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஆயுதமுனையில் விடுவிப்பு

தங்காலை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு தீவிரவாதத் தலைவர்களை இனந்தெரியாத நபர்கள் ஆயுத முனையில் விடு

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உவர் உத்தமர் பழைய பல்லவியைத்தான் பாடுறார். முந்தியும பேச்சுவார்த்தை, வட்ட மேசை எண்டு அடிக்கடி அழைச்சவர் தானே...!

### மீண்டும் அழைப்பு

கொழும்பு நவ. 4

மீண்டும் சந்திக்க வரும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன ஏழு அரசியல் கட்சிகள் கூட்டணிக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் குமார் பொன்னம்பலத்தைச் சந்தித்த பின்னரே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்தார்.

இச்சந்திப்பு எதிர்வரும் சனிக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது [ஒ எ]

### காங்கேசன் முகாமில் இளைஞர்களைப் பார்க்க அனுமதி வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம், நவ 4

காங்கேசன் துறை புனர்வாழ்வு முகாமில தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களைப் பார்வையிட அவர்களின் பெற்றோர்களுக்கு கடந்த சனிக்கிழமை முதல் அனுமதி வழங்கப்படவில்லை,

தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் ஒருவரின் பெற்றோர் இத்தகவலைத் தெரிவித்தனர்,

காங்கேசன் துறை புனர்வாழ்வு முகாமில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

04 - 11 - 1988
ஐப்பசி 19
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
6-04முதல் 7-34வரை
ராகுகாலம்:-
10 34 முதல் 12-04 வரை

### காபந்து அரசு குறித்து பலமுனைகளிலும் பேச்சு

கொழும்பு நவ 4

நாடாளுமன்றத்தைக் கலைத்து காபந்து அரசை அமைப்பது குறித்து கொழும்பில் பல முனைகளிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

காபந்து அரசை அமைப்பது குறித்து ஜனாதிபதிஜெயவர்த்தன தனது அமைச்சர்களுடன் சாதாரணமான முறையில் ஆலோசனை நடத்தி வருவதாக அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் ஜனாதிபதி, தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பண்டத்தரிப்புப் பகுதியில்

யாழ்ப்பாணம் நவ. 4

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்றும் போக்குவரத்து மற்றும் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

நேற்று முன் தினம் பண்டத்தரிப்புப் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து இந்நிலை தொடர்ந்து நீடிக்கது.

நேற்றுப் படையினர் பண்டத்தரிப்பு பிரம்பத்தை, விளான், மாதகல் ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர். (ஒ-10)

அச்சுவேலியில்

'ஆதவன் அரிசி ஆலை'
கோலாகலத்
திறப்பு விழா

இன்று பிற்பகல் 2 00 மணியளவில் காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் ஆளணி உத்தியோகத்தரும், வடபிராந்திய போ. வ. சபையின் இயக்குனர் சபை உறுப்பினருமான அகிலஇலங்கை சமாதான நீதிபதி திரு. சி. ஈ. குணரத்தினம் அவர்கள் ஆலையைத் திறந்து வைக்கின்றார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ. சுப்பிரமணியம்

அரசடி, தோப்பு,
அச்சுவேலி.

(7709)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சுன்னாகம் 18, புகையிரத வீதியில் உள்ள தங்கராஜ் மோட்டர்ஸில் உள்ள B S.A. மோட்டார் சைக்கிள்களும், உதிரிப்பாகங்களும், Honda உதிரிப்பாகங்களும் 8-11-88 தீபாவளி தினத்தன்று ஏலத்தில் விற்பனை செய்யப்படும். பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் 5-11-88 இலும், 6-11-88 இலும் காலை 9 00மணியில் இருந்து பி ப. 4 30 மணி வரையும் பார்வையிடலாம். (7708)

நல்ல புத்தம் புதிய நிலையிலுள்ள 30 Sri Hiace LH-30 Model Van (டீசல்) உடன் விற்பனைக்கு உண்டு. Full Seated Cut Glass உள்ளது. முருகன் இல்லம், பழைய தெரு, இருபாலைச்சந்தி, கோப்பாய். (C-718)

தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டி, ஹோல் செற். Fan, விருந்தை செற், சட்டில் மெத்தை, கண்ணுடி மேசை, கசற் றேடியோ, சாப்பாட்டு மேசை, செற்றி குசன்கள் மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. No: 7, பண்டாரக்குளம் மேற்கு வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (7702)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Show-case, கட்டில், சாப்பாட்டு மேசை, T. V. Stand. கசற்றேடியோ, காரியாலயமேசை, குசினிகபேட் பியானோ, எக்கோடியன் Pressure Cooker, மெலோடிக்கா, மற்றும் கிளாஸ் வகைகள் பித்தளைப் பொருட்களும் மிகவும்மலிவுவிலையில் உடன் விற்பனைக்குண்டு. 75/1, பலாலிவீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (7713)

### வான், மோட்டார் சைக்கிள் விற்பனை

Austin J4 டிலிவரி வான், Honda C B 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. நல்ல நிலைமையில் உள்ளது. விலை நேரில் பார்த்து கதைத்துக் கொள்ளலாம். தொடர்பு: K. பரமநாதன், சுருவில் ஊர்காவற்றுறை. (BusRoute 780) (7911)

### தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

### தீபாவளி மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்!! (1-11-88 முதல் 9-11-88 வரை) புதிய டிசைன் ஸ்கேட், பிளவுஸ், பேபி சூட், கவுன்கள், பெரியோர், சிறுவர்களுக்குரிய ரெடிமேட் ஆடைகள் Fashion Garments; 20. 22 கடைச்சாமி வீதி. (Off Navalar Road) நீராவியடி; யாழ்ப்பாணம். (7716)

### மலிவு விற்பனை

முற்றிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

### சமூகக்கல்விப் பயிற்சிகள்

ஆண்டு 11, 10, 9, 8, 7, 6 வகுப்புகளுக்குரிய சமூகக்கல்விப் பயிற்சிகள் - வினு விடைகள் - வெளிவந்து விட்டன. ஆக்கியோன்: க. குணராசா– எம். ஏ. விற்பனையாளர்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (7715)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Christumpu Farm ஒருநாள் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் எமது ஸ்தாபனத்தில் 10-11-88 அன்று விற்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்ய விரும்புபவர்கள் சுஜேராஸ் 21, வேம்படி வீதியில் உள்ள எமது காரியாலயத்தில் பதிவு செய்யலாம். முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது தொகையாக வாங்குபவர்களுக்கு விசேஷ சலுகை வழங்கப்படும். (C/ 672)

Hisex Golden Comet பிறவுண் சேவற் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளைகறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும் முன்கூட்டிப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (7249)

Hyline கறுப்பு வெள்ளை 4நாள் பேட்டுக் குஞ்சுகளும் Christombu Farm 10நாள் புறொயிலர்க் குஞ்சுகளும் சையிருப்பில் உள்ளது A. J S Farm No 45. கொழும்புத்துறை வீதி, (சந்தனமாதா கோயில் அருகாமை) சுண்டுக்குளி யாழ்ப்பாணம்; 'லீலாபதி' கண்டி வீதி மிருசுவில்: (7705)

3½ மாத G C பிறவுண்பேடு புதன்கிழமையும் Hisex Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக்குஞ்சுகள், கறுப்பு. சேவற்குஞ்சுகள் 4-11 88 வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (7649)

ஹைலைன் கோல்டன் கோமற் கைசெக்ஸ் பேடுகள் 12 50 கறுப்பு வெள்ளை சேவல் 6/-, 3/- புறுயிலர் 16/- முற்கூட்டியே பதிவு செய்து இருவாரத்துக்குள் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ சாயிதுர்கா என்ரப்பிறைசஸ், P. சிவதாஸ், நாமகள் ஒழுங்கை, பொற்பதிவீதி, கொக்குவில் கிழக்கு. (7913)

### தேவை

திருநெல்வேலிச் சந்தியில் உள்ள AMR போட்டோ ஸ்ரற் சென்ரருக்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. 6-11-88 காலை 10மணிக்கு நேரில் வரவும். (7718)

### விற்பனைப் பிரதிநிதி

எமது நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஒரு விற்பனைப்பிரதிநிதிதேவைப்படுகின்றர். வயது 18-25 வரை இருத்தல் வேண்டும். G. C. E [சாதாரணம்] சித்தியடைந்திருக்க வேண்டும். முழு விபரங்களுடன் 10-11-88க்கு முன்பாக கடித மூலம் விண்ணப்பிக்கவும். ராம்சன்ஸ் பிரயாணப் பொட்கள் தொழிலகம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். (7910)

### தவறிவிட்டது

ராஜகோபால சாமி ரகுபதி ஆகிய எனது அடையாள அட்டை இல. 572860949V தின்னவேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் அடையாள அட்டைக் கவருடன் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்திலோ or 6, பெருமாள் கோயிலடி என்ற விலாசத்திலோ ஒப்படைக்கவும். (7714)

டேவிற்சன் ஜீவநாதன் நைல்ஸ் ஆகிய எனது அடையாள அட்டை புங்கங்குளத்திற்கும் கனகரத்தினம் ரேட்டுக்கும் இடையில்தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (7712)

### சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக்கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும். 'ஷப்ரு' சேவைப் பிரிவு, இல. 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (C/691)

### ரோணியோ

தரமான ரோணியோ பிரதிகளை (தமிழ்/ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் "ஷப்ரு" சேவைப் பிரிவு, இல: 19, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/692)


### விசேட பயிற்சி வகுப்புக்கள்

Radio, T. V., Deck, வயறிங், பிளம்பிங், குளிர்சாதனவியல் (A/C) றீவைண்டிங், வெல்டிங், மோட்டோ மெக்கானிசம், கட்டடப் படம் வரைதல் ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தொடர்பு:- Nesta Technical Institute, 59, Station Road, Jaffna. (சான்றிதழ்களும் வழங்கப்படும்.) (7672)

### A/L 90 இரசாயனம்

108 Brown Road. A/L 90 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் 7-11-88 திங்கள் 4 30 p m திங்கள், புதன் 4 30 to 6 00 p m (7914)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பண்ணிசைப் பாவலர்

அமரர்

### இராசநாயகம் துரைச்சாமி

(முன்னாள் மாவை கிராம விதானையார்)

மண்ணுலகு: 10-10-1907 விண்ணுலகு: 09-11-1985

திதி: 04-11-1988

அன்புடன் வளர்த்து அறிவுரைகள் பல நல்கி வாழ்வாங்கு வாழவழி வகுத்த அன்புத் தந்தையே!!

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குணக் குன்றாய் விளங்கிட நற்போதனைகள் பல நவின்று நல் வழியில் எம் இல்லறத்தை இயங்க வைத்த எம் இனிய மாமாவே!!

நாவுக்கினிய நல்லுணவுப் பண்டங்களும் காதுக்கினிய கருத்து நிறை திருமுறையும் பண்பாக ஊட்டி மகிழ்வித்த பாட்டாவே!!!

நீங்கள் அமரராகி ஆண்டு மூன்று ஆகிடினும் உம் நினைவு எம் மனதில் ஊசலாய் ஆடிடுமே

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரியும்;

மகன், மருமகள், பேரர்கள்,

(7722)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி மகேந்திரராஜா உமாதேவி

மலர்வு: 1947-03-16 உதிர்வு: 1987-10-22

திதி: 1988-11-04

அம்மாவும் அப்பாவும் நீயே என்று உங்கள் நிழலில் வாழலாம் என்ற நம்பிக்கையில் இருந்தோம். அன்றில் பறவைபோல் அப்பாவைத் தேடிச் சென்றுவிட்டீர்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கின்றோம்

பிள்ளைகள் உஷா, ருஜி, அம்மா.

"மணிவாசா"
உரும்பராய் வடக்கு,
உரும்பராய். (7869)

சுன்னாகம் அம்பேத்கார் சன சமூக நிலையத்தினரின் 1988 10 30 இல் நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெறும் சீட்டிலக்கங்கள்:

* 1 ஆம் பரிசு · மின் மணிக்கூடு: இல. 104
* 2 ஆம் பரிசு - மின் ஸ்திரிகைப்பெட்டி இல. 166
* 3 ஆம் பரிசு- வானொலிப்பெட்டி இல. 1389

ஆறுதல் பரிசு பெறுவோர் சீட்டு இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 383 | 2352 | 1737 | 1631 | 1409 |
| 78 | 312 | 254 | 1102 | 2545 |
| 392 | 952 | 154 | 671 | 477 |
| 2542 | 9 | 1619 | 1742 | 102 |
| 1084 | 1149 | 169 | 1552 | 1209 |

சுன்னாகம்.

நிர்வாக சபை
அம்பேத்கார் சனசமூக நிலையம்.

(C/732)

### நடன நாடகப் போட்டியில் முதலிடம்

கொக்குவில், நவ 4

யாழ் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட இசை, நடன, நாடகப் போட்டிகளில்யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயம் நான்கு முதலாம் இடங்களைப் பெற்றுள்ளது.

சிறுவர் நாடகத்தில் 'நானேராஜா' என்ற நாடகமும், சமூக நாடகத்தில்' எங்கள் தவப்பயன்' என்ற நாடகமும் முதலாம் இடங்களைப் பெற்றன

சிரேஷ்ட பிரிவு கிராமியப் பாடலில் வைத்தீஸ்வரவித்தியாலயக் குழுவினர் முதலாம் இடத்தையும் தனிநடனத்தில் இப் பாடசாலை மாணவியின் மயில் நடனம் முதலாம் இடத்தையும் பெற்றன. (ச-69)

### நெடுங்கேணியில்

நெடுங்கேணி, நவ 4

நெடுங்கேணியில் பொதுமக்களும் வர்த்தகர்களும் மாணவர்களும் தினசரி கைது செய்யப்படுவதால் இப்பகுதியில் ஒரு பதற்றநிலை உருவாகியுள்ளது. (இ-108)

### பால் இல்லாது நோயாளர் பாதிப்பு

வடமராட்சி, நவ.4

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பால் இல்லாததால் நோயாளர் பாதிக்கப்படுகின்றனர்.

இவ் வருடம் மார்ச் மாதத்தில இருந்து மேற்படி வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான பால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது சம்மந்தமாக மந்திகை அரசினர்ஆதார வைத்திய சாலை நிர்வாகம் யாழ் வைத்திய தலைமைக் காரியாலயத்துக்கு முறைப்பாடுகள் செய்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லைஎன தெரிவிக்கப்படுகிறது. (சி-160)

### வான் மோதி விபத்து

குருநகர், நவ 4

வேலணைப் பாலத்தில் நிறுத்தப்பட்டிருந்த வான் ஒன்றுடன் தொழிலாளர்களுடன் சென்ற இன்னொரு வான்மோதி விபத்துக்கு உள்ளானதில் குருநகரைச் சேர்ந்த ஆறு சடற்றொழிலாளர்கள் காயமடைந்தனர்

இச்சம்பவம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை நடைபெற்றது.

காயமடைந்தவர்கள் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் நால்வர்பெயர்கள்:- அமிர்தம் ஜோண்சன் (வயது 32), பாக்கியநாதர் பாப்பா (வயது 19) யோசேப் குட்டி (வயது 24), செல்வராசா நிக்ஸன் (வயது 15). (இ-51)

### நாடா வெளியீடு ஓவியத் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், நவ 4

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இசை நாடா வெளியீடும் அயோத்தியா இராமர் ஓவியத் திரை நீக்கமும் நடைபெறும்.

காலநிதி அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் ஓவியக் கலைஞர் திரு.செ. இரத்தினகோபால் இன்னிசை வேந்தர் திரு. பொன். சுந்தரலிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்கள்,

திருவாளர்கள் இ. ஜெயராஜ் க. சி. குலரத்தினம் பாராட்டுரை வழங்குவார்கள். (ச)


## கொம்பியூட்டர் பயிற்சி

Diploma in Computer Programming Course இற்கான, புதிய பிரிவுகள்: சனி/ ஞாயிறு நாட்களில் ஆரம்பமாகின்றன

★ விரும்புவோர் விண்ணப்பங்களைப் பெற்று Rs. 400/-செலுத்திபெயர்களைப் பதிவு செய்யலாம்.

IDP 342. K. K. S Road, (சிவன் கோயிலடி), யாழ்ப்பாணம். (7867)



## இதோ!

வெளிவந்து விட்டது.

✶ "கணக்கியல் வழிகாட்டி" ✶

ஆக்கம்:

**A. துரை**

(யாழ். பிரபல வர்த்தக ஆசிரியர்)

✶ O/L வர்த்தக மாணவர்கள் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தவும்.

✶ A/L கணக்கியல் (முதல்வருடம்) மாணவர்களுக்கும் உகந்தது.

✶ யாழ். பிரபல புத்தகசாலைகளில் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள். (7870)



✶ எமது நேற்றைய புதிய வெளியீடு

(1) ✶ பிரபு ✶ கௌதமி ✶ லட்சுமி ✶ சந்திரசேகர் ✶ S. S. சந்திரன்

வழங்கும்

"ரத்ததானம்"

## எமது தீபாவளி வெளியீடுகள்:

(1) ✶ விஜயகாந் ✶ நிரோஷா "செந்தூரப் பூவே"

(2) ✶ கமல் ✶ சீதா "உன்னால் முடியும் தம்பி"

**குணம் வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C/442)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



கந்தையா தங்கராசா (தங்கு)

(K. T. அச்சக இணைஸ்தாபகர்)

தோற்றம்: 16-04-1964 மறைவு: 21-09-1988

21-09-1988 இறைவனடி எய்திய எமது செல்வன் தங்குவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

அம்மா, அப்பா
அண்ணமார், தங்கை,
உற்றார், உறவினர், நண்பர்கள்

கோவிலாக்கண்டி,
கைதடி (7720)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளில் இருந்து

# வடபகுதிக்கு அனுப்பப்படும் காசோலை மோசடி தொடர்கிறது

## கட்டாரிலிருந்து ரூ. 11,550 டிராப்ட் அனுப்பியவருக்கு ஏற்பட்ட அனுபவம்

யாழ்ப்பாணம், நவ 4

வட பகுதியில் உள்ளவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் காசோலைகள் மோசடி செய்யப்படுவதாக மேலும் பல புகார்கள் கிடைத்துள்ளன.

வடபகுதியில் உள்ளவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்துவரும் காசோலைகள் பல கொழும்பிலுள்ள சில வங்கிகளில் கையாடப்படுகின்றன என்று கடந்த 13ஆம் திகதி உதயனில் செய்தி வெளியாகி இருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

எமது செய்தியைப் படித்த பின்னர் தான் அனுப்பிய 'டிராப்ட்' ஒன்று எவ்விதம் மோசடி செய்யப்பட்டு மாற்றப்பட்டிருக்கிறது என்பதை கட்டார்டோகாவிலிருந்து ப. சுகுமாரசிங்கம் என்பவர் ஆவணங்களுடன் அனுப்பி வைத்திருக்கிறார்.

கட்டாரிலிருந்து கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதியிடப்பட்ட 11 550 ரூபா பெறுமதியான டிராப்ட் ஒன்றை அவர் இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

சந்தையா வேலும் மயிலும் என்பவரின் பெயருக்கு இந்த டிராப்ட் நெல்லியடி இலங்கை வங்கியில் உள்ள குறிப்பிட்ட ஒரு சேமிப்பு இலக்கத்தில் வைப்பீடு செய்து மாற்றுவதற்கு வசதியாக அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால் இந்த டிராப்ட் எப்படியோ அபகரிக்கப்பட்டு மோசடி செய்யப்பட்ட பின்னர் கொழும்பில் வைத்தே ஒரு வங்கியில் மாற்றப்பட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட டிராப்ட் சந்தையா வேலும் மயிலும் என்ற பெயரைத் தவிர வங்கியின் பெயர், வங்கியின் விலாசம், கணக்கு இலக்கம் யாவும் மாற்றப்பட்டுள்ளன.

இதே வேளையில் சந்தையா வேலும்மயிலும் என்ற பெயருக்கு அடையாளக் காட்டும் தயாரிக்கப்பட்டு கொழும்பில் உள்ள வங்கி ஒன்றில் காசோலை மாற்றப்பட்டிருக்கிறது.

இந்த டிராப்ட் காணாமல் போனது பற்றியும், இதனை மாற்றுவதற்கான உத்தரவை அறிவிக்கும் கட்டாரில் உள்ள சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் கொழும்பு வங்கிக்கு 3. 12. 86 திகதியிட்ட கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருந்தது.

ஆனால் சம்பந்தப்பட்ட டிராப்ட் 21. 10 86 அன்றே மாற்றப்பட்டு விட்டதாக வங்கி அந்த நிதி நிறுவனத்துக்கு அறிவித்துவிட்டது.

(ஐ-இ)

---


உ
சிவமயம்

## ★ திருமண அறிவிப்பு ★

மணமகன்:
**செல்வன் கேதீஸ்வரன்**
(மேற்கு ஜேர்மனி)

மணமகள்:
**செல்வி வசந்தினி**
(சாவகச்சேரி)

திருமண வைபவ இடம்:-
சத்செமைண்ட்சவுஸ், உர்பன் வீதி - 9
6953, குண்டல்ஸைம மேற்கு ஜேர்மனி
காலம்: 6 11- 1988 ஞாயிற்றுக்கிழமை
மாலை 4- 00 மணி முதல 6 00 மணிவரை

Asbacher Street. 28
6928, Helm Stadt - Bargar,
West Germany.

திருமதி அ. கந்தசாமி,
பூரணபவனம்,
கண்டி ரோட்,
சாவகச்சேரி.

திரு. திருமதி செ தில்லைநாதன்
இளைப்பாறிய அதிபர்,
துவாரகை,
உடுவில் தெற்கு,
சுன்னாகம்.

(7598)


---

# கடும் பாதிப்புற்றோர்களுக்கான நிவாரணம்

1983 - 07 - 24 தொடக்கம் 1987 - 12 - 31 வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஊனமுற்றவர்களுக்கும், குடும்ப அங்கத்தவரை இழந்த குடும்பங்களுக்கும் நிவாரணம் யாழ். செயலகத்தினால் வழங்கப்படவுள்ளது இதுவரை காலமும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வந்த இந் நிவாரணப் பணி 88 - 08 - 31 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்துக் கிணங்க 88 10 - 15 ஆம் திகதி தொடக்கம் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் மாவட்ட அரச அதிபர்களுக்குப் பாரப்படுத்தப் பட்டுள்ளது. இந் நிவாரணத்துக்கான விண்ணப்பப் படிவங்கள் 88 - 11 - 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் கரவெட்டி, பருத்தித்துறை உதவி அரசாங்க பிரிவுடன் யாழ் செயலகத்தில விநியோகிக்கப்படும்.

| தினங்கள் | | உ. அ. அ. பிரிவு |
|---|---|---|
| திங்கள் | — | யாழ்ப்பாணம். நல்லூர். |
| செவ்வாய் | — | கோப்பாய். உடுவில், சாவகச்சேரி. |
| புதன் | — | சங்கானை, சண்டிலிப்பாய். தெல்லிப்பழை. |
| வியாழன் | — | வேலணை ஊர்காவற்றுறை, நெடுந்தீவு. |
| வெள்ளி | — | பருத்தித்துறை. கரவெட்டி. |

விண்ணப்பப்படிவங்களைப் பெறத் தகுதியுடையோர் பின் வரும் ஆவணங்களுடன் நேரில் வந்து படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. படிவம் பெற வருபவர் தம்மை அறிமுகப்படுத்தும் ஆவணங்கள
   - (i) தேசிய அடையாள அட்டை
   - (ii) கிராம சேவை அலுவலரால் சமீபத்தில் வழங்கப்பட்ட அறிமுக அட்டை
   - (iii) பின் உரித்தாளர்/பாதுகாவலன் என உரிமை கோரும் பட்சத்தில் கி. சே அ / உ. அ. அ. ஆகியோரினால் வழங்கப்பட்ட சிபார்சுக் கடிதம்.
2. உயிரிழப்புக்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
   - (i) மரணச் சான்றிதழ்
   - (ii) திருமண அத்தாட்சிப்பத்திரம்
   - (iii) பொலீஸ் அறிக்கை
3. ஊனமுற்றோர் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
   - (i) அரசாங்க வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்ட வைத்திய அத்தாட்சிப் பத்திரம்
   - (ii) பொலீஸ் அறிக்கை

● மேற் கூறிய ஆவணங்கள் கொண்டு வராவிடில் விண்ணப்பப்படிவம் வழங்கப்படமாட்டாது.

● முக்கிய கவனிப்பு:-

(i) அரச, அரச கூட்டுத்தாபன உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசசார்புள்ள நிறுவன ஊழியர்களுக்கு இத்திட்டம் ஏற்புடையதாகாது. ஆனால் ஓய்வூதியம் பெறுநர்களுக்கு இது ஏற்புடையது.

(ii) பாதுகாவலரோ அல்லது பெற்றோரோ ஊனமுற்ற பராயமடையாத பிள்ளைக்காக விண்ணப்பிக்கலாம்

(iii) ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு புனரமைச்சின் கீழ் நிவாரணம் பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதற்கு அருகதையற்றவர்கள். இந்நிவாரணத்தை ஏற்கனவே பெற்றவர்களின் விபரம் அமைச்சிலிருந்து பெறப்பட்டுள்ளது.

வை. மு. பஞ்சலிங்கம்
யாழ். மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
31-10 88.

---

மன்னாரில்

# புதிய மாணவர்களை சேர்ப்பதில் நெருக்கடி

மன்னார் நவ 4

மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் புதிய ஆண்டில் புதிய மாணவிகளை சேர்க்க முடியாத இக்கட்டான நிலை தோன்றியுள்ளது.

மேற்படி கல்லூரியில் ஆயிரத்திநூறு மாணவிகளுக்கான வசதிகளே உள்ளன

எனவே புதிய ஆண்டில் ஆயிரத்திநூறு மாணவிகளுக்கு மேல் அனுமதி வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என இக்கல்லூரியின் உதவி அதிபர் திருமதி நடராஜா உதயனுக்குத் தெரிவித்தார்

தேசியப் பரீட்சையில் இக்கல்லூரி மாணவிகள் கடந்த ஆண்டுகளில் கூடிய வீதத்தில் சித்தி அடைந்திருப்பதும் கல்லூரியின் மாணவர் பெருக்கத்துக்குக் காரணமாகும்.

பெற்றோரும் எப்படியாவது தமது பிள்ளைகளை இப் பாடசாலையிலேயே அனுமதிக்கவேண்டுமெனப் போட்டிபோடுகிறார்கள்.

இதனால்புதிய ஆண்டில் ஒரு நெருக்கடியான கட்டத்தை நாம் எதிர்நோக்க வேண்டிவரும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-ரி)

## நெடுந்தீவில் புதிய வெளிச்ச வீடு

நெடுந்தீவு நவ 4

நெடுந்தீவு தாழைத்துறையில் புதிதாக ஒரு வெளிச்சவீடு நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இதனால் இரவில் வரும் மீனவத தொழிலாளர்களின் கலங்கள் துறையைச் சிரமமின்றி வந்தடையக் கூடியதாக இருக்கும்

இங்குள்ள மீன்பிடித் தொழிலாளிகள் ஒருங்கிணைந்து அமைத்துவரும் இந்த வெளிச்சவீடு 25 அடி உயரம் கொண்டது.

இவ்வெளிச்சவீடு ரூபா 12 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. (ச-111)

## ஏற்றத்தடை

நெல்லியடி கிழக்குப் பகுதியில் உள்ள பாதுகாப்புப்படையினரின் சென்றிக்கு அப்பாலும் மேற்குப்பகுதியில உள்ள சென்றிக்கு அப்பாலும் வைத்தே வாகனங்களில் பொதுமக்கள் ஏற்றப்பட்டு வருகின்றார்கள்.

(சி- 160)

## பழையமாணவர் அன்பளிப்பு

இளைமயாணன அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் திருத்த வேலைகளுக்கு பழைய மாணவர்கள் உதவி அளித்துள்ளனர்

மாணிக்கம் குணரத்தினம் என்பவர் 310 டொலர்களையும் இமையாணன் குடும்ப நலத்திட்டச்சங்கத்தினர் குடிநீர்த் தாங்கியையும் சி. தாமலிங்கம் என்பவர் 5½ பரப்பு நிலத்தையும் அன்பளிப்புச் செய்துள்ளார்கள்

(சி- 160)

## நேரடி ஒளிபரப்பு

கொழும்பு நவ 3

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையில் டாக்காவில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆசியக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டி நேரடியாக ஒளிபரப்பப்படும்.

இன்று காலை9மணிமுதல் இந்த ஆட்டத்தை ரூபவாஹினி நேரடியாக ஒளிபரப்பும். (உ)

# இந்தியாவிலிருந்து திரும்பிய 421 அகதிக் குடும்பங்கள் ரூ2,000 நிவாரணம் பெற்றன

யாழ்ப்பாணம் நவ 4

புனர்வாழ்வு அமைச்சின் மீள் அமைப்புக்கான நிவாரணப் பணம் இரண்டாயிரம் ரூபா இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பிய 421 குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளது

யாழ். செயலக உயரதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல், மே மாதங்களில்கப்பல்மூலம் காங்கேசன்துறைக்கு வந்த இருநூற்றித் தொண்ணூற்றேழு குடும்பங்களுக்கு கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமையும் — ஜூன் ஜூலை, அக்டோபர் ஆகிய மாதங்களில் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு வந்த நூற்றி இருபத்திநான்கு குடும்பங்களுக்கு கடந்த 31 ஆம் திகதி திங்கட்கிழமையும் மேற்படி நிவாரணப் பணம் யாழ் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

## விண்ணப்ப படிவம் இவர்களுக்கு இல்லை

கோப்பாய் நவ. 4

கடந்த வருட அசம்பாவிதங்களின் போது கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் குடியேற்றத் திட்டமொன்றில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு மீளக் குடியமர்த்துவதற்கு நிவாரணப்பணமான ரூ 2 ஆயிரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

(இ 78)

---


**விக்னா** டியூசன் சென்ரர்
52, ஸ்ராஞ்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
பிரிவு:

## 89 துரித மீட்டல்
(Evening Classes)

பழைய பாடத்திட்டம்
**O L ஆரம்பம்: 4- 11- 88**
மாலை 2. 45 - 4. 45

மு. குறிப்பு:
கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்

**O L** மாணவர்களின் நன்மை கருதி புதிய, பழைய பாடத் திட்டத்துக்கான பரீட்சை சென்ற வருடம் போல் இலவசமாக நடத்தப்பட உள்ளது.

பெயர்களைப் பதிவு செய்து அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

விக்னா டியூசன் சென்ரர்


---

## பருவ மழையின்றி விவசாயிகள் கவலை

மன்னார் நவ 4

மன்னார்மாவட்டத்தில் பருவமழை பெய்யாததினால் இங்குள்ள விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

இங்குள்ள பெரும்பாலான விவசாயிகள் இம்முறை கூடுதலாக புழுதி விதைப்பையே நம்பி இருந்தனர்

ஆனால் விதைத்த நெல் புழுங்கி பயன் அற்றதாகப் போய் விட்டதால் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர் (ச-ரி)

---


உ

## 1989 ஆம் ஆண்டு அஷ்டலக்ஷ்மி கலண்டர் சிறப்பு விற்பனை வைபவம்

இடம்: சிவா பிறிண்டேர்ஸ், கைதடி.
காலம்;
**06 - 11 - 1988**
ஞாயிற்றுக்கிழமை காலை 9. 00மணி

பிரதம அதிதி:
திரு E. சரவணபவன் அவர்கள்
நிர்வாக இயக்குநர் ஷாறு, உதயன், சஞ்சீவி

விற்பனையை ஆரம்பித்து வைத்தல்;
திரு ப. செல்வநாதன் அவர்கள்
அதிபர் ஆர். எஸ் அச்சகம், யாழ்ப்பாணம்.

சிறப்புரை:
திரு செ. ஸ்ரீரங்கநாதன் அவர்கள்
முன்னாள் மாவட்ட முகாமையாளர்
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றியுடன்;
அஷ்டலக்ஷ்மி,
வெளியீட்டாளர்.

41, கண்டி வீதி,
கைதடி.

### கலண்டர் விலை விபரம

| | |
|---|---|
| தினத்தாள் கலண்டர் (ஸ்பெஷல்) | 33/- ரூபா |
| NO. 1 | 31/ ரூபா |
| வாரத்தாள் கலண்டர் (52 தாள்கள் கொண்டது) | ரூபா 19/50 |

விசேட இணைப்பு:
சாவகச்சேரிய பஞ்சாங்கம்
தினத்தாள் கலண்டர்கள பரிசுபெறும் பிரசுர இலக்கங்கள்;
9, 15, 104, 208, 305 407, 507 615, 726 816 927 1002, 1517, 1718, 1916, 2001, 2004, 3001 3004, 3008

(C/432)



## இதோ சிங்கர் வழங்கும் சீமா டயல் தராசு







● பொருளைப் போட்டதுமே எடையை அறியலாம்.
● இரு பக்கமும் தெரியும் எண் சுட்டுக்குறியீடுகள்
● சுழற்றக்கூடிய, துருப் பிடிக்காத பொருள் தட்டு.
● துருப்பிடிக்காத உருக்குத் தட்டுத் தாங்கியும் பலமான பிளாஸ்டிக் நிலைச்சட்டமும்.

சீமா பெடஸ்டல் தராசு (மேசையில் வைப்பது)
மொடல் C 6 TP
அளவுத் திறன்-6 கி.கி. X 20 கி. விலை: ரூ. 2,150/-

சீமா டயல் தராசு (தொங்கவிடுவது)
மொடல் C 6 H
அளவுத் திறன்-6 கி.கி. x 20 கி. விலை: ரூ.1,790/-
மொடல் C 15 H
அளவுத் திறன் - 15 கி. கி. X 50 கி. விலை: ரூ. 1,980/-

ஒரு வருடத்திற்குப் பூரண உத்தரவாதம். இலங்கை அளவை-நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரை பெற்றவை. சிலோன் வேவிங் மெஷின்ஸ் லிமிட்டெட் உற்பத்தி.

Minds/SA/6

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.

விவசாயப் பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## University of Jaffna
## TENDER NOTICE

Tenders are invited from qualified contractors for the following works at University of Jaffna

(1) Earth work at Department of Siddha Medicine at Kaithady.

(2) Repairs to the office of the Dean/Faculty of Arts and adjoining rooms.

Tenderers should be registered for Rs. 250 000/- or over for civil works with University of Jaffna

Tender forms can be obtained from the Works Engineer, University of Jaffna from 07 11 1988 to 10-11-1988 at 9-00 a m to 3-00 p m on producing a receipt from Bursar University of Jaffna for payment of non refundable tender fee of Rs. 100/- for each tender

The perfected tenders should be sent to the Works Engineer on or before 18 11-1988 at 10 00 a m

Tender Board of University of Jaffna reserves the right to reject any tender.

Actg. Registrar
University of Jaffna.

(C-713)



# BECON

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## A/L 89

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

### பொருளியல்

S. வரதராஜன்

11.00—12.00 பிரிவு I:
தேசிய வருமானம்

1.00—2.00 பிரிவு II:
தேசிய வருமானம்.

### அளவையியல்

S. S. மனோகரன்

11.00 — 12.00 பகுதி II:

ஆரம்பம்:
05-11-1988 சனி.

(C 720)



## புதிய உயர் கல்லூரி

**B.A. - 1988**

மெய்யியல்-வேல் சிவானந்தன்

20 11-88இல் இருந்து நடைபெறும்.
40 மணித்தியால வகுப்புக்கள்.

**G.A.Q. - 90**

புதிய பிரிவு - ஆரம்பம்:
05-10-1988

**G.C.E. A/L 89**

இந்து நாகரிகம்:
அருள்நங்கை

3ஆவது பிரிவு - (சனி, ஞாயிறு)

ஆரம்பம்:
05 - 10 - 88 [பி.ப. 2.00]

விவரங்களுக்கு:
S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(C 710)


உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு

# மாகாண ரீதியில் புலமைப் பரிசில் வழங்குமாறு கோரிக்கை

### கல்விச் சேவையாளர் கூட்டுறவுச் சிக்கனச் சங்கக் கூட்டத்தில்

யாழ்ப்பாணம் நவ 4

'கல்விச் சேவையாளர் கூட்டுறவுச் சிக்கனச் சேமிப்புச் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் பல்கலைக்கழக கல்வியைப் பெறும் பொழுது மாகாண ரீதியில் புலமைப்பரிசில் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் இலங்கைக் கல்விச் சேவையாளர் கூட்டுறவுச் சிக்கனச் சேமிப்புச் சங்கப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

இக்கூட்டத்துக்கு திரு. எம். டபிள்யூ பரஞ்சோதி தலைமை வகித்தார்.

ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

நகைகளை ஈடு பிடித்துக் குறைந்த வட்டிக்கு உதவுதல்,

★ சிங்களத்திலும் தமிழிலும் சிறுகதைப் போட்டியை நடத்திப் பரிசளிப்பதுடன், பரிசுக் கதைகளை நூலாக வெளியிடுதல்.

★ ஆசிரியர்களுக்கான வீடுத் திட்டத்தைக் கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் விஸ்தரிப்பதற்காக அரசகாணியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

★ 1989 ஆம் ஆண்டுக்கான தினக்குறிப்பை டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் வழங்குவதற்கு ஒழுங்கு செய்தல்

★ அங்கத்தவர்களுக்குப் பாஸ் புத்தகங்கள் வழங்குதல்,

★ குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடி வழங்குதல்

★ இதுவரை ஒன்பதாக இருந்த பரிபாலன சபையை பதினைந்தாக அதிகரித்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு பிரதிநிதித்துவம் கொடுத்தல்,

தமிழ் பத்திரங்கள் இருந்தும் தமிழ் அங்கத்தவர்களுக்கு சிங்களப் பத்திரங்கள் வழங்கப்படுவதையும் தினக்குறிப்பு பாஸ் புத்தகம் தனிச்சிங்களத்தில் விநியோகிப்பதையும் யாழ் மாவட்டப் பிரதிநிதி திரு. ந சிவபாதம் செயலாளர் திரு விக்கிரம ஹென்னயக்காவிடம் எடுத்துக் காட்டினார்

இவைகளுக்குப் பதில் அளித்த செயலாளர், தமிழ்ப் படிவங்களை விநியோகிக்காது விட்டது பற்றி விசாரிப்பதாகவும் தமிழ் அங்கத்தவர்களுக்குத் தமிழிலே பாஸ் புத்தகம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தினக்குறிப்பை கல்வித் திணைக்களம் அச்சடித்து விநியோகிப்பதால் இது பற்றிக் கல்வி அமைச்சுடன் கதைத்து ஆவன செய்வதாகவும் உறுதி கூறினார். (ச)

## இருவர் சுட்டுக் கொலை

கொழும்பு, நவ 4

தென் பகுதித் தீவிரவாதிகள் 2 பேரை கடந்த திங்கட்கிழமை சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஒருவர் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் ஜாதிகசேவா சங்கமயக் கிளையின் செயலாளர்.

மற்றவர் அபிவிருத்தி லொத்தர் ஏஜண்ட் ஆவார். (உ-எ)

# அறிவையும் குடும்ப வருவாயையும் மேம்படுத்தப் பாடுபட வேண்டும்

### உழைக்கும் மகளிர் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

பருத்தித்துறை, நவ 4

'பெண்கள் தமது ஓய்வு நேரங்களை ஒருபோதும் வீணே கழிக்கக் கூடாது. ஓய்வு நேரங்களைப் பெண்கள் அறிவு ஆற்றலை வளர்க்கக்கூடிய வகையிலும் குடும்ப வருவாயை மேம்படுத்தக் கூடிய வகையிலுமே செலவழிக்க வேண்டும்.

வடமராட்சி கோட்டக் கல்வியதிகாரி செல்வி திலகவதி பெரியதம்பி வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன அங்குரார்ப்பணக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டம் நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மகளிர் பிரிவில் நடைபெற்றது

கூட்டத்தை இலங்கைப் பனம்பொருள் அபிவிருத்திச்சபையும், பருத்தித்துறை புலோலி ஏற்றுமதிக் கிராமக் கம்பனியும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தன.

செல்வி தி. பெரியதம்பி தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது—

''நாட்டின் பொருளாதாரமேம்பாட்டிலும் சமுதாய அபிவிருத்தியிலும் இன்று பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

விஞ்ஞான நாகரிக மாற்றங்களுக்கேற்ப பெண்களின் அறிவு, ஆற்றல்களும் வளர்க்கப்பட வேண்டியது மிக முக்கியமாகும்.

வீட்டு நிர்வாகம், குழந்தை பராமரிப்பு, விருந்தினரைப் பேணுதல், போன்றவற்றிலும் பெண்கள் முன்னணியில் திகழ வேண்டும்.

பெண்களின் அபிவிருத்தி மேம்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் பெண்களே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

இதன் மூலமே பெண்ணினம் நன்மை பெற முடியும்

உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதால் பெண்கள் தமது குடும்ப வருவாயைப் பெருக்கிக்கொள்ள முடியும்

குடும்பப் பெண்களின் முக்கிய பொறுப்பு குடும்ப வருவாய்க்கேற்ற செலவினங்களைச் சிக்கனமாக மேற்கொள்ளுதலாகும்'' இப்படி அவர் கூறினார்.

புலோலி ப நோ. கூ. சங்கத் தலைவர் திரு. பொன். மாணிக்கவாசகர், சட்டைவேலி ப. நோ கூ. சங்கத் தலைவர் திரு ரி. சிதம்பரப்பிள்ளை, திரு. ஜீ. தங்கவேல் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். (ச-118)

## பல் சுகாதார வாரம்

யாழ்ப்பாணம் நவ 4

எதிர்வரும் 14 ஆம் திகதியில் இருந்து 20ஆம் திகதி வரை பல் சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இதற்கான சுற்றுநிருபங்கள் சகல அரசாங்க செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பல்சுகாதாரவாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் 25 சிறுவர்பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு சிறுவர்களுக்கு ''பிரெஷ்'' பற்பசை வழங்கப்படவுள்ளன.

இவை திட்டமிடல் பணிமனையூடாக வழங்கப்படும், (இ-5)



## யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் புதிய நிர்வாக சபை உத்தியோகத்தர்களாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. இ. சிவயோகேஸ்வரன், உப தலைவர்:- திரு க. இரத்தினசபாபதி, இணைச் செயலாளர்கள்:- திரு. க. நாகேஜயக்குமாரன், திரு யோ. செ. எட்வேட்ராசா, பொருளாளர்:- திரு. ப. பிருந்தாமன், உப-பொருளாளர்: திரு சி வ சிவகுமாரன்

இவர்களுடன் பதினொரு பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# முத்துஐயன்கட்டுஇடதுகரை கற்சிலைமடு பகுதிகளில் யானைகள் அட்டகாசம்

ஒட்டுசுட்டான், நவ. 4

முத்துஐயன் கட்டு இடதுகரை, கற்சிலைமடு பகுதிகளில் யானைகள் பயிர்களையும், வீடுகளையும் அழித்து அட்டகாசம் செய்கின்றன.

முத்துஐயன் கட்டு குளத்துக்கு அண்மித்த காட்டுப் பகுதியில் நடமாடும் யானைகள் கூட்டாகவும் தனித்தும் மக்கள் வாழும் பகுதிகளாகிய முத்துஐயன் கட்டு, கற்சிலைமடு பகுதிகளுக்குள் பிரவேசித்து தென்னை வாழை மரங்களை முறித்தும் அழித்தும் வீடுகளை சேதப்படுத்தியும் வருகின்றன.

இதேவேளை இருவர் யானையால் தாக்கப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இதனால் இப்பகுதி மக்கள் இரவு வேளையை மிக அச்சத்துடனேயே கழிக்கின்றனர் (இ - 113)

# வீட்டுத் தோட்டப்போட்டி: ரூ.10 ஆயிரம் வரை பரிசு

ஒட்டுசுட்டான், நவ 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் சமநல சேவை உதவி ஆணையாளரினால் வீட்டுத் தோட்டப் போட்டி நடத்தப்பட உள்ளது.

சமநல சேவை நிலைய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் போட்டி நடைபெறும்.

கமநல சேவை மட்டத்தில் முதல் 3 இடங்களுக்கும்பரிசில்கள் வழங்கப்படும். 1 ஆம் பரிசு 1000 ரூபா. 2 ஆம் பரிசு 500 ரூபா, 3 ஆம் பரிசு 250 ரூபா.

கமநல சேவை மட்டத்தில் முதலாம் இடங்களைப் பெறுபவர்கள் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடத்தைப் பெறுபவர்களுக்கு 10,000 ரூபாவும் 2 ஆம் இடத்தைப் பெறுபவர்களுக்கு 5000 ரூபாவும், 3 ஆம் இடத்தைப் பெறுபவர்களுக்கு 2500 ரூபாவும் வழங்கப்படும். (ச-113)

# தொடர்மதிப்பீட்டு முறை கைவிடப்படமாட்டாது

### அதிபர்கள் கூட்டத்தில் கல்வி அதிகாரி உரை

மானிப்பாய், நவ 4

தொடர் மதிப்பீடு சம்பந்தமாக ஆசிரியர்கள் மத்தியில் நிலவி வந்த ஐயப்பாடு நீக்கப்பட்டுள்ளது. தொடர்மதிப்பீட்டு முறை இல்லாமல் போய்விடும் என்ற வதந்தி வீணானதாகும். ஒருபோதும் தொடர் மதிப்பீட்டு முறை கைவிடப்படமாட்டாது.

எனவே, கணித விஞ்ஞான பாட ஆசிரியர்கள் மதிப்பீடு பற்றிய ஆவணங்களை கட்டாயமாகத் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலை அதிபர்களின் கூட்டத்தில உரையாற்றும் பொழுதுவிஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு வி. நடராசா மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாய் வட்டார ... யில் ''சேதமடைந்த பழுதடைந்த பாடசாலைக் கட்டடங்களைத் திருத்தவும் உபகரணங்கள் செய்து கொடுக்கவும் ஆகிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. எனவே அதற்கான நிதியைப் பெற்று அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள அதிபர்கள் முன்வரவேண்டும்'' இப்படி ... கூறினார் (ச-90)


## வேலை வாய்ப்பு

லிபியா:

1. H.V DRIVERS
2. PLUMBERS
3. STEEL ERECTORS
4. FIBRE GLASS TECHNICIAN
5. PIPE FITTERS
6. INSULATION TECHNICIANS/FITTERS
7. REPAIR TECHNICIAN FOR GENERATORS/WELLING MACHINES
8. MECHANICS FOR AIR COMPRESSORS
9. SPECIALIST FORELECTRICAL MOTOR CONTROL SYSTEM

சம்பளம்:
8 மணித்தியாலத்திற்கு
9—10,000 ரூபா வரை

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

கொழும்பில்:
18 1/4 முதலிகே மாவத்தை,
கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்:
ந பாஸ்கரன் J.P
இந்திராணி ஏஜென்சி
நெல்லியடி,
கரவெட்டி.

(7851)


## முதலாம் ஆண்டு நினைவு கூரல்

திரு. G. V பாலசிங்கம்
[சட்டத்தரணி JPUM]

திரு பாலசிங்கம் அவர்கள் 4-11-87இல் காலமானார் இவர் சிங்கப்பூரில் 1917இல் பிறந்து அங்கே ஆரம்பக்கல்வி கற்றார் பின் தன் சொந்த ஊரான மல்லாகத்துக்கு வந்து யாழ்ப்பாண கல்லூரியில் சேர்ந்து படித்து Cambridge Senior பரீட்சை சித்தியடைந்தார். கொழும்பு சட்டக்கல்லூரியில் படித்து Proctor பட்டம்பெற்றார். 1947 ஆம் ஆண்டில் அச்சுவேலியில் சட்டத்தரணி கனகரத்தினத்தின் மகள் பத்மராணியை விவாகம் செய்தார். அன்று தொட்டு அவர் அச்சுவேலி வாசியானார். மல்லாகம் கோட்டில் தன் வேலையைப் பார்த்து வந்தார். நீதவான் லீவில் இருக்கும் பொழுது அவருக்கு பதிலாக நீதிபதி வேலை பார்ப்பார். அவரிடம் செல்பவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்வார் பழகுவதற்கு இனியவர். 1985, 86ஆம் ஆண்டுகளில் அச்சுவேலி Lions Clubன் தலைவரானார் அப்பொழுது நாட்டுக்கு அரிய சேவைகள் செய்தார்.

இவர் மறைந்த அன்றே இவருடைய மனைவியும் மறைந்தார் இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் Landon இலும் ஒரு மகள் சிங்கப்பூரிலும் உளர்.

அவர்களின் ஆத்மா சாந்தியடைவதாக.

ஓர் அன்பன்

(7495)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
திரு. பொன்னையா ஆரூரன் (நாதன்)
உரிமையாளர்:
(ஸ்ரீ விக்னேஸ்வரா அச்சகம், யாழ்ப்பாணம்)

திதி: 4- 11- 1988

உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக.

உங்கள் பிரிவால் துயருறும்:-
மனைவி, சகோதரர்கள் உறவினர்,
'தமிழகம்'
வேப்பவ லேன்
உரும்பிராய் தெற்கு.

(7701)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அருங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

**பொருள்:**
கேடு வரும் காலத்தில் கைவிட்டு ஒதுங்குகின்றவரின் நட்பு, எமன் கொல்லுங் காலத்தில் நினைத்தாலும் நினைத்த உள்ளத்தை வருத்தும்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
04-11 1988 த. பெ இல 23


## நல்ல காரியம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறது. அந்த நல்ல காரியத்துக்கு வித்திட்டவர்—யோசனை தந்தவர் — யாராக இருந்தாலும் அவரைப் பாராட்ட வேண்டும்.

வசதி குறைந்த மாணவர்களுக்கு, எதிர்பாராத சூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்படும் மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென நிதியம் ஒன்றை யாழ்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பித்துள்ளது: துணைவேந்தர் நல நிதியம் என்பதாகும் அது. அந்த நிதியத்தை ஆரம்பிக்க முடிவு செய்திருப்பதையே நல்ல காரியம் என்று குறிப்பிட்டோம்.

ஈழத்தில், தமிழ் மாணவர்களின் கல்வி, உயர்கல்வி வாய்ப்புகளும், வசதிகளும் எந்த அளவுக்கு மறுக்கப்பட்டும், தடுக்கப்பட்டும், பாதிக்கப்பட்டும் வந்தன, வருகின்றன என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. பாகுபாடு. புறக்கணிப்பு. வீழச்செய்தல் ஆகியவை தமிழர் கல்வித் துறையில் சடந்த இரு தசாப்தங்களுக்கு மேல் "தண்ணீர் பட்ட பாடாகி"ப் போய்விட்டது!

அதனால் —

ஏதோ கிடைக்கும் வழி துறைகளே, சந்தர்ப்பங்களே கொழுகொம்பு என நினைத்து, தமிழ் மாணவர்கள் அவற்றைப் பற்றிப் படர்ந்து தமது கல்வியைப் பெற வேண்டிய நிலை உள்ளது.

இவ்வாறு கஷ்டப்பட்டுக் கிடைக்கும் கல்வி வசதிகளை சரிவரப் பயன்படுத்த முடியாத நிலையில் எமது மாணவர்களில் பலர் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக வசதி குறைந்த, வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

சிங்கள மாணவர்களைப் பொறுத்தமட்டில் மகாபொல என்றும் வேறு வேறு புலமைப் பரிசில்கள், தனிப்பட்ட நிதியங்கள் என்றும் பல பக்கங்களாலும் உதவிகள் கிடைக்கின்றன:

தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை மிகச் சிலருக்கே மகாபொல நிதியும், புலமைப்பரிசில்களும் கிடைக்கின்றன.

ஆகையால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மட்டத்தில் மாணவர் கல்வித்தேவைகளுக்கு நிதிவசதி செய்வதற்கு என்று ஒரு நிதியம் ஆரம்பிக்கப்படுவது பெரும் வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும்

பிரஸ்தாப துணைவேந்தர் நல நிதியத்துக்கு நிறையப்பணம் சேர வேண்டும். நிதியத்தின் பண உதவி குறைகள். கண்டனங்களுக்கு இடமின்றி சேரவேண்டிய — தகுதியுள்ள— மாணவருக்குக் கிடைக்கவேண்டும் இந்த நிதியம் தேயாது வளர்ந்து கொண்டிருக்க வசதி படைத்தவர்கள் தொடர்ந்து நன்கொடைகள் வழங்க வேண்டும். இவற்றிலேயே நிதியம் ஆரம்பிக்கப்படுவதன் நோக்கம் நிறைவேறுவதும் வெற்றியும் தங்கியுள்ளது.

தமிழ் மாணவர் நலனைச் சீரிய நிலையிலும், உயரிய தரத்திலும் பேணுங்கால், ஒவ்வொருவரும் இயன்றவரை நிதயத்துக்கு உதவவேண்டும். வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் பங்கு இதற்குப் பெரிதும் வேண்டப்படும். நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர; நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்; அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர் என்பது இதற்கு எல்லா விதத்திலும் பொருந்தும்.

## போலந்துக்கு பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர் விஜயம்

வார்ஸோ. நவ 3

பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் போலந்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

போலந்து அரசுத்தலைவர்களை அவர் சந்தித்துப் பேசினார்.

அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் போலந்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அவர் அப்போது வலியுறுத்தினார். வெள்ளிக்கிழமை சுதந்திர தொழிற் சங்கம் உருவான கிடான்ஸ் நகருக்குச் சென்று தொழிற் சங்கத் தலைவர் வால்சேயைச் சந்திக்க திருமதி தாட்சர் திட்டமிட்டிருக்கிறார். (எ)

# கொழும்பில் இருந்து சென்றவர்கள் மாலைதீவில் புரட்சி

# ஜனாதிபதி, அமைச்சர்கள் கைது, 200 பேர் பலி

### ✯ வீதிகளில் சடலங்கள் ✯ புரட்சி நடத்தியவர்கள் தமிழில் பேசினர் ✯ ஆக்கிரமிப்பு படை போன்று தாக்குதல்

மாலே, நவ 4

மாலைதீவில் நேற்றுக் காலை சதிப்புரட்சி ஒன்று இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது

கொழும்பில் இருந்து சில தினங்களுக்கு முன்னர் கப்பல் ஒன்றில் சென்றதாகக் கூறப்படும் துப்பாக்கி மனிதர்கள் நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகை தேசிய பாதுகாப்புப்படை தலைமை அலுவலகம் மற்றும் அரசுப் பணிமனைகளை தாக்கியதாகத் தெரிவிக்கப் பட்டது

ஜனாதிபதி, மற்றும் அமைச்சர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் சுமார் 200 பேர் வரையில் கொலைப்பட்டிருக்கலாம் எனவும்—

சடலங்கள் வீதிளில் காணப்பட்டன என்றும் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள், மாலேயில் இருந்து தொலைபேசி மூலம் கிடைத்த தகவல்களை வைத்து செய்திகள் வெளியிட்டன.

ஆட்சியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் தாக்குதல் நடத்தியவர்கள் வீதிகளில் அரசுக்கு எதிரான சுலோகங்களை எழுப்பிய வண்ணம் சென்றனராம்.

மாலே விமான நிலைய உடனடியாக மூடப்பட்டது

கொழும்பில் இருந்து மாலேக்கு நேற்றுக்காலை செல்லவிருந்த எயர் லங்கா விமானம் தனது பயணத்தை ரத்துச்செய்தது.

மாலேயில் தரித்து நின்றபயணிகள் விமானங்கள் சேவைகளை ரத்துச் செய்துவிட்டு அங்கேயே நிற்கின்றன.

தாக்குதல் நடத்திய துப்பாக்கி மனிதர்கள் சிலர் தமிழில் பேசித்திரியக் காணப்பட்டனர் என்று மாலேயிலிருந்து சிலர் தொலைபேசியில் தெரிவித்தனர் என்று கொழும்பில இருந்து பி பி சி செய்தியாளர் கிறிஸ் நட்டால் நேற்றுக் காலை அறிவித்தார்.

புரட்சி நடத்தியவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைப் பார்த்தால் வேறுநாடு ஒன்றில் இருந்து வந்த படைகள் ஆக்கிரமிப்பு நடத்தியது போன்று காணப்பட்டதாக மாலேயில் இருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன என்று பி.பி.சி செய்தியாளர் மேலும் தெரிவித்தார். (எ)

## 1,000 தீவுகளைக் கொண்ட மாலைதீவு

மாலே, நவ 3

மாலைதீவ ஜனாதிபதியாக மீண்டும ஜனுப் சயூம் அடுத்த வாரம் பதவி ஏற்க இருந்தார்

1000 தீவுகளைக் கொண்டது மாலைதீவு நாடு.

அண்மையில் நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பில் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக 99 98 சத வாக்குகளைப் பெற்று ஜனுப் சயூம் தெரிவானார் (எ)

## இந்தியாவில் குழப்பத்தைத் தூண்டும் வெளிநாட்டுக்கு எதிரான நடவடிக்கை

### ஆரம்பமாகிவிட்டது என்கிறார் ராஜீவ்

கல்கத்தா, நவ 3

உள்நாட்டில் குழப்ப சக்திகளைத் தூண்டிவரும் வெளிநாடு ஒன்றின் செயல்களுக்கு எதிரான ஆக்கபூர்வமான மாற்று நடவடிக்கைகளை இந்தியா எடுக்கத் தொடங்கி விட்டது. இந்தியப்பிரதமர்ராஜீவ் காந்தி கல்கத்தாவிமான நிலையத்தில் வைத்துச் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

விஞ்ஞானமேதை சி.வி ராமனின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களை ஆரம்பிக்க பிரதமர் சல்கத்தா சென்றிருந்தார்.

அப்போது அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

டிசம்பர் மூன்றும் வாரம் சீனா செல்லவிருக்கின்றேன். இருநாடுகளுக்கும் இடையேயான எல்லைத்தகராறு குறித்து அப்போதுநிச்சயம் சீனத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவேன். இந்தியாவின் நீண்ட எல்லைகளை பாதுகாப்பதில் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

எல்லைத் தகராறில் சீனாவின் போக்கில் அவ்வளவு முன்னேற்றம் இருப்பதாகத் தெரியவில்லை

ஆனால் இந்தியாவுடனான உறவை சீனா பெரிதாக மதிக்கத் தொடங்கியிருக்கிறது.

சமாதான, சக வாழ்வுக் கொள்கையை நாம் அயல்நாடுகளுடன் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளோம்.

எதிர்க்கட்சிகள் சில சேர்ந்து காங்கிரஸுக்கு எதிரான கூட்டணி ஒன்றைஅமைத்திருப்பது பயன்தரப்போவது இல்லை. ஆனால் அது நாட்டைப் பலவீனப் படுத்தும்.

எதிர்கட்சிக் கூட்டணி ஆரம்பமான உடனேயே செயலிழந்து விட்டது. இப்படி பிரதமர் தெரிவித்தார். (எ)

## ஜன்மோர்ச்சா தனிக்கட்சி

புதுடில்லி நவ 2

ஏனைய அரசியல் கட்சிகள் கூட்டணியில் இடம் பெற்றிருந்தாலும் தனது தனித்தன்மையை பாதுகாக்கப் போவதாக திரு.வி.பி சிங் தலைமையிலான ஜன்மோர்ச்சா அறிவித்திருக்கிறது.

தனது செயற்குழுக் கூட்ட முடிவில் ஜனமோர்சாவின் பொதுச் செயலாளர் புதுடில்லியில் இத் தகவலை வெளியிட்டார்.

சைபீரிய ராடர் நிலையம்:

## சோவியத் - அமெரிக்கப் பேச்சுக்கள் தோல்வி

வாஷிங்டன் நவ 3

சோவியத் யூனியனில் சைபீரியா மாநிலத்தில் உள்ள ராடர் நிலையத்தை அகற்றிவிட வேண்டும் என்ற கோரிக்கைதொடர்பாக ஜெனிவாவில் அமெரிக்க சோவியத் அதிகாரிகளுக்கு இடையே நடந்த பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்தன.

மூன்று தினங்களாக இப் பேச்சுக்கள் இடம் பெற்றன.

சைபீரியாவில் உள்ள ராடர் நிலயம் உளவு வேலைக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும். ஆயுத பரிகரண உடன்படிக்கைக்கு முரணான முறையில் இந்த நிலையத்தை அமைத்திருப்பதாகவும் அமெரிக்கா, சோவியத் யூனியன் மீது குற்றம் சுமத்தி வருகிறது.

சோவியத் அதிகாரிகள் அதனை ஏற்கவில்லை; ஆனால் அந்தநிலையத்தை சர்வதேச வான வெளி ஆராய்ச்சி நிலையமாக மாற்றப்போவதாக சோவியத் யூனியன் அறிவிக்கது ஆனால் அதுபற்றிய விவரங்களை சோவியத் யூனியன்வெளியிடவில்லை (எ)

## தமிழ் நாடு ஜனதாவில் பிளவு

சென்னை, நவ.2

தேசிய முன்னணியில் தி.மு.க சேர்க்கப்பட்டதை ஆட்சேபிக்கும் தமிழ் நாடு ஜனதாவில் உள்ள பிரிவினர் நேற்று தங்கள் தலைவராக திரு. விஜயராகவனைத் தெரிவு செய்தனர்.

வெளி உலகில்

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் 19 ஆண்டு சேவை பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் விவேகானந்த ஞாபகார்த்த மண்டபத்தில் இன்று 4 ஆம் திகதி தெய்வீக மாலைப்பொழுது என்னும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதனை முன்னிட்டு சுவாமி சித்ரூபானந்தா இக்கட்டுரையை எழுதி உள்ளார்.

# இயற்கையின் வளங்களின் முதல் பங்கு ஏழைகளுக்கே

இன்று உலகத்துக்கு வேண்டியது யாது?

நம் கண் முன்னால் பலர் அல்லற்படுவதைக் கண்டும் நாம் மௌனமாக இருக்கிறோம்.

எங்களுக்குஇதயத்தில் ஒருவித துடிதுடிப்பேனும் ஏற்படவில்லை கஷ்டப்படுபவனும் எங்கள் சகோதரன்தானே என்று எண்ணுகிறோமில்லை

ஏன் இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது தெரியுமா?

மனிதர்கள் அநேகர் உலக போகங்களை பெரிதாக பதித்து அதையே மீண்டும் மீண்டும் அனுபவிப்பதில் கண்ணுங்கருத்துமாக இருப்பதனால், மற்றவர்களின் துன்பங்கள் அவர்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை

இந்தச் சந்தர்ப்பதில் உலகிடை வாழ்ந்த உன்னதமாபெருந்துறவி சுவாமி விவேகானநதரின் அறைகூவல்களை செவிமடுத்தல் சாலச் சிறந்தது அவர் பின் வருமாறு சொன்னார்:—

நீங்கள் கிராமம் கிராமமாக, ஊர் ஊராக, நாட்டின் எல்லா இடங்களுக்கும் சென்று மக்களைப் பார்த்து, சோம்பலை ஒழித்து எழுந்திருங்கள்! என்று சொல்லுங்கள். சோம்பி இருப்பதனால் பயனில்லை என்பதை அவர்கள் உணரும்படி செய்யுங்கள்; அவர்களுடையஉண்மையான நிலை இன்னது தான் என்பதை அவர்களுக்கும் புரியும்படி செய்து, 'சகோதரர்களே; எழுந்திருங்கள்; விழித்துக்கொள்ளுங்கள்; இன்னும் எவ்வளவு காலத்திற்கு அறியாமை என்ற தூக்கத்திலேயே ஆழ்ந்திருக்கப் போகிறீர்கள்? என்று கேளுங்கள்.

அவர்கள் தங்கள் நிலைமையைத் தாங்களே சீர்படுத்தி எவ்வாறு உயர்வு பெறமுடியும் என்பதை அவர்கள் அறியும்படி விளக்கிக் கூறுங்கள்.

நீங்கள் உடனடியாக இப்போது செய்ய வேண்டிய முதல் வேலை இது தான்.

அத்துடன் நமது சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் மகத்தான உண்மைகளை எவரும எளிதில் புரிந்து கொள்ளத்தக்க [illegible] அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்; அந்த மேலான உண்மைகளை அவர்களுக்கு புரியும்படி செய்யுங்கள்.

### மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிரத் தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாவான்

ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்படுபவர்கள், ஏழைகள், பலவீனர்கள் இவர்கள் எல்லோரும் அகதனைதெய்வ வடிவங்களே அல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக் கூடாது? சங்கைக்கரையில் கிணறு வெட்டப்போவது உண்டா?

இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப்பற்றிச்சிந்தியுங்கள். அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள் அவர்களுக்காக இடைவிடாமல் பிரார்த்தனை செய்யுங்கள் அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழி காட்டுவார்.

இயற்கையின் எல்லா வளங்களில் முதற்பங்கு ஏழை எளியவர்களுக்குத்தான் தரப்பட வேண்டும். அவ்விதம் தந்தது போக எஞ்சியிருப்பதைப்பெறவே நமக்கு உரிமை உண்டு.

முதலில் நம்மைச் சுற்றியிருப்பவர்களைத் தெய்வமாக நினைத்து வழிபடுங்கள் உலகில வாழும் மக்களும் மற்ற [illegible] நமது தெய்வங்கள் முக்கியமாக, நமது தேசமக்களே நமது முதல வழிபாட்டிற்கு உரிய தெய்வங்கள் ஆவர். நம்மைச் சுற்றியிருப்பவர்களைத் தெய்வமாக நினைத்து வழிபடுங்கள்.

பிறர்பொருட்டு இந்த ஒரு பிறவியையாவது நீங்கள் தியாகம் செய்யக் கூடாதா? வேதாந்தம் படிப்பது, தியானம் செய்வது முதலிய காரியங்களை அடுத்த ஜன்மத்துக்கு வைத்துக்கொள்வோம். பிறருக்குச் சேவை புரிவதிலேயே இந்த உடல் போகட்டுமே

### கடமை

நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை. பிறருக்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை புரிவதும் தான் நாம் ஏன் உலகிற்கு நன்மை செய்ய வேண்டும்? மேலோட்டமாகப் பார்த்தால் உலகிற்கு நன்மை செய்வதாகத் தோன்றும் ஆனால் உலகிற்கு நன்மை செய்வதனால் உண்மையில் நமக்கு நாமேதான் உதவி செய்துகொள்கிறோம்

உயர்ந்த பீடத்தில் நின்று உன்கையில் ஐந்து காசுகளை எடுத்துக் கொண்டு 'ஏ பிச்சைக்காரா! இதை வாங்கிக் கொள்" என்று நீசொல்லாதே மாறாக அவனுக்குக் கொடுப்பதனால் உனக்கு நீயே உதவி புரிந்துகொள்ள முடிந்ததை நினைத்து அந்த ஏழை அங்கே இருந்ததற்காக அவனிடம் நீ நன்றியுள்ளவனாக இரு. இதன்மூலம் தூய்மையும் பரிபூரணத் தனையும் உன்னை வந்தடையும்

பிறர் நலத்தின் பொருட்டு உழைப்பது மனதின் கோணல்களைத் திருத்துகிறது.

சுயநலமா இல்லையா என்பதை உனது மனச்சாட்சியையே முதலில் கேட்டு நீ தெரிந்து கொள். சுயநலம் என்பது இல்லையானால் பிறகு எதையும் நீ பொருட்படுத்தவேண்டாம். எதுவும் உன்னைத் தடை செய்யமுடியாது செயலில் இறங்கு. அருகில் இருக்கும் செயலைச் செய்யத் தொடங்கு அவ்விதம் செய்யச் செய்ய உண்மை உனக்கு எளிதில் புலப்படும்

### இறைவன் உதவி

இதயபூர்வமாகக் காரியங்களைச் செய்பவனுக்கு இறைவனும்உதவி புரிகிறான். உன்னால் இயன்றவரையில் நற்செயல்களைச் செய், உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறு இல்லை. உண்மையோடு ஒருவன் இந்த ஓர் அறத்தைக் கடைப்பிடிப்பானானால் அவன் முத்தி பெறுவது நிச்சயம்.

திக்கற்றவர்கள் ஏழை எளியவர், கல்வி அறிவு இல்லாத விவசாயிகள், தொழிலாளர் ஆகியோருக்குச் சேவைசெய்வதே சேவாச்சிரமத்தின் முக்கிய நோக்கமாகக் கொண்டு 19 ஆண்டுகளாகச் சேவைபுரிந்து வருகின்றது. இச்சேவை செய்வதற்கு உறுதுணையாய் இருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் திருவடிகளுக்கும் அன்னையின் அருட்கடாட்சத்திற்கும், சுவாமி விவேகானந்தரின் வழிகாட்டுதலுக்கும் எங்களை அர்ப்பணிக்கின்றோம்.

## விதவைகளுக்கு உணவுப் பார்சல்

காங்கேசன்துறை நவ 3

வலி வடக்கு பகுதியில் உள்ள110 விதவைகளுக்கு மாதாந்தம் உணவு பார்சல்களை வழங்க சர்வோதயம் முன்வந்துள்ளது.

வலி வடக்கு பிரஜைகள்குழு ஒன்றியத்தினர் சர்வோதய பிரதிநிதிகளைச் சந்தித்து வலியுறுத்தியதை அடுத்து இநத உணவுப்பார்சல்களை வழங்க சர்வோதயம் முனவந்துள்ளது.

இப்பார்சல்களை வழங்குவது தொடர்பான அங்குரார்ப்பண வைபவம் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற சமயம் வடபிராந்திய சர்வோதய அமைப்பாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் கலந்துகொண்டார்.

(இ-68)

## நாய்களுக்குத் தடுப்பூசி

காங்கேசன் துறை, நவ 4

காங்கேசன் துறை, கீரிமலை சுகாதார பரிசோதகர் பிரிவில் இன்று 4 ஆம் திகதி முதல் 11-ஆம் திகதி வரை நாய்களுக்கு விசர்நாய்க்கடி தடுப்பூசிகளை ஏற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன் துறை சுகாதார பரிசோதகர் பிரிவில் இன்று முதல்7 ஆம்திகதி வரை 15 தெரிவு செய்யபபட்ட நிலையங்களில வைத்து தடுப்பூசி ஏற்றப்படும்.

கீரிமலை சுகாதார பரிசோதகர் பிரிவில் 9 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை 15 தெரிவு செய்யப்பட்ட நிலையங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படும்.

பொதுமக்கள் இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி நாய்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறு சுகாதார பரிசோதகர் திரு ரி. மகாதேவன் கோரியுள்ளார் (இ-68)

## ஆயுர்வேத மருந்துவகைகள் வந்துசேர்ந்தன

வேலணை நவ 4

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட நயினாதீவு புங்குடுதீவு, வேலணை ஆயுள்வேத வைத்திய சாலைகளுக்கு ஆயுர்வேத மருந்து வகைகள் கொழும்பில் இருந்து வந்து சேர்ந்துள்ளன.

ஆனால்வேலணை ஆயுர்வேத வைத்தியசாலையில் படையினர் தொடர்ந்து முகாமிட்டுள்ளதால் இவ்வைத்தியசாலை இயங்க முடியாத நிலையில் உள்ளது. (இ-167)

## முழுமையாக நிவாரணப் படிவம் வழங்கப்படவில்லை

வடமராட்சி, நவ.4

வடமராட்சியில் ரூபா 2,000 நிவாரணப் படிவம் வழங்கும் வேலை இன்னும் அரைகுறை நிலையிலேயே இருந்து வருகிறது (சி-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உழுந்து மா**

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய சுத்தமாகவும் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டும் விற்பனையாகிறது.

தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

**அண்ணா கோப்பிக்கடை**
யாழ்ப்பாணம்.



# உதயன்

(4 - 11 - 1988 வெள்ளிக்கிழமை



**மல்லி கலந்த கோப்பி**

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லிக் கோப்பி இப்போது 10ⁿgr/ பக்கட்டுக்களில் வெளி வருகிறது.

1 பக்கட்விலை 10/- ரூபா. வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

**அண்ணா கோப்பிக் கடை,**
யாழ்ப்பாணம்.


## ஜீ.சீ.ஈ. விசேட பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், நவ. 4 வடபகுதிக்கு என விசேடமாக நடத்தப்பட்ட ஜீ. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் சில பகுதிகளிலும் டிசம்பர் பரீட்சைகள் தடைப்பட்டதன் காரணமாக விசேட பரீட்சை கடந்த ஜூலையில் நடைபெற்றது.

இந்தப் பரீட்சையின் பெறுபேறுகளே தற்பொழுது வெளியாகியிருக்கிறது.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் மட்டுமே நேற்று வெளியாகின.

கொழும்பிலிருந்து கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் மூலம் பரீட்சைப் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இதே சமயம் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுவிட்டதாகவும், இன்னும் ஓரிரு தினங்களில் அவை இங்கு வந்து சேரும் என்றும் அறிய வருகிறது.

இதே வேளையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கான பெறுபேறுகளும் நேற்று வெளியிடப்பட்டன. (உ-9)

## வேம்படி முன்னணியில்

யாழ்ப்பாணம், நவ 4 நேற்று வெளியான விசேட ஜீ. சி. ஈ சாதாரண பரீட்சையின் முடிவின் படி யாழ். நகரப் பகுதியில் வேம்படி மகளிர் கல்லூரி முன்னணியில் நின்றது.

இக்கல்லூரியைச் சேர்ந்த 9 மாணவிகள் 8 பாடங்களிலும் விசேட சித்திகளைப் பெற்றுள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரியில் ஏழு மாணவர்களும் யாழ். பரியோவான் கல்லூரியில் ஆறு மாணவர்களும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நான்கு மாணவிகளும், யாழ் இந்துமகளிர் கல்லூரியில் மூன்று மாணவிகளும் 8 பாடங்களிலும் விசேட சித்திகளைப் பெற்றுள்ளனர். யாழ் மத்திய கல்லூரியில் ஒரு மாணவர் மட்டும் ஆறு பாடங்களில் விசேட சித்தி பெற்றுள்ளார். (ஒ-5 10-9)

## பெருமாள் கோவிலில் வைக்கப்பட்ட குண்டு

### செயலிழக்கப்பட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ 4 நேற்று முன் தினம் யாழ். பெருமாள் கோவிலுள் பொறுப்பற்றவர்களால் வைக்கப்பட்ட 'டைம்' வெடிகுண்டு பின்னர் செயலிழக்கச் செய்யப்பட்டதாக இந்தியப் படையின் யாழ் நகர அலுவலகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"இந்தக் குண்டு தொடர்பாக இந்திய அமைதிப்படைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அமைதிப் படையினர் தமது சொந்த உயிராபத்துக்கு மத்தியில் குண்டை கோவிலுக்கு வெளியே கொண்டுவந்து அதனை வெடிக்க வைத்தனர்.

இதன் மூலம் பல அப்பாவி மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டன.

சொந்தஇலக்கை அடைவதற்கும் தகாத செயல்களைப் புரிவதற்கும் உணர்ச்சியை எழுப்புகிறவணக்கத் தலங்களைக் கூட இத்தகையோர் விட்டு வைக்கிறார்கள் இல்லை என்பதுதுரதிருஷ்டவசமானதாகும்"

—இப்படி அந்தக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## காரைநகரில் ஹர்த்தால்

யாழ்ப்பாணம், நவ 4 காரைநகர் பகுதியில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

நேற்று முன் தினம் காரைநகர்ப் பகுதியில் உயிரிழந்த போராளி ஒருவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வ பி போ சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை. எனினும் தனியார்பஸ்கள் மூளாய் வரை சேவையாற்றின. (உ-9)

## புஞ்சிநிலமே இராஜினமா!

கொழும்பு நவ 4 சப்பிரகமுவாமாகாண முதல் அமைச்சர் ஜி வி. புஞ்சிநிலமே தனது பதவியை இராஜினமாச்செய்தார். அவரின் இராஜினமாவை ஜனதிபதி ஜெயவர்த்தன ஏற்றுக்கொண்டார்.

வெள்ளவாயாவில் அண்மையில் 3 இளைஞர்கள்கொலை செய்யப்பட்டதுதொடர்பாக முதலமைச்சரின் மகன் சுசந்த புஞ்சிநிலமே கைது செய்யப்பட்டுக்காவலில் வைக்கப்பட்டு இருக்கிறர்

இதுசம்பந்தமானவிசாரணைகள் சுமுகமாகநடைபெற தனது ராஜினமா உதவும் என்று திரு ஜி வி புஞ்சி நிலமே தெரிவித்தார்.

இதனிடையில் சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்க் காங்கிரஸ், லிபரல் கட்சி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய இலங்கைதேசியக்கட்சிஆகிய ஆறுகட்சிகள் திரு புஞ்சிநிலமேயைஇராஜினமாச் செய்யும்படி கேட்டிருந்தன. (உ-எ)

## சுட்டுக் கொலை

வடமராட்சி நவ 4 கடந்த புதன்கிழமை உடுப்பிட்டியைச் சேர்ந்த நவரெத்தினம் லோகநாதன் (வயது 33) என்னும் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஒ-160)

## தென்பகுதி முற்றாக நேற்று ஸ்தம்பித்தது

கொழும்பு, நவ.4 நாடு முழுவதிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி ஜே. வி. பி. விடுத்த வேண்டுகோளையடுத்துநேற்றுகொழும்பு உட்பட நாட்டின் தென்பகுதி முழுவதும் முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

போக்குவரத்துச் சேவைகள் எதுவும்நடைபெறவில்லை.

அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் ஊழியர்கள் வேலைக்குச் சமுகம் தரவில்லை. இதனால் அலுவலகங்கள் மூடிக் கிடந்தன.

கடைகள் சிற்றுண்டிச் சாலைகள் எதுவும் திறக்கப்படவில்லை

வீதிகள் யாவும் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டன

நேற்று கொழும்பில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட முயற்சித்த தனியார் வாகனம் ஒன்றின்மீது இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

கொழும்புமா நகரில் நேற்று ஒருசில குறிப்பிட்ட வாகனங்களே ஓடின, குறிப்பிட்ட சிலரே வீதிகளிலும் காணப்பட்டனர்.

வழக்கம்போல் பாதுகாப்புப் படையினரும் பொலீஸாரும் நேற்று தென்பகுதி முழுவதும் தீவிர ரோந்து நடவடிக்கைகளிலும். பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர். (ஒ-ஐ)

## 'கைஸ்' நடத்தவிருந்த பேரணி நிறுத்தம்

யாழ்ப்பாணம் நவ 4 ஸ்ரீலங்கா முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி இன்று நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணி நிறுத்தப்பட்டுள்ளது.

இராணுவ நெருக்கடிகளாலும் அச்சுறுத்தல்களாலும் பேரணி நிறுத்தப்பட்டதாக மாணவர் இளைஞர் பொது மன்றம் (கைஸ்) நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது

இந்தப்பேரணி இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக முன்றலிலிருந்து ஆரம்பித்து யாழ். கச்சேரி செயலகத்தை சென்றடைய இருந்தது. ஊர்வல இறுதியில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற இருந்தது.

"அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான எமது போராட்டத்திற்கு பல் வேறுபட்ட வெகுஜன மாணவ அமைப்புகள் ஆதரவு தெரிவித்தன. இதன் விளைவாக தேவையற்ற உயிர்ப்பலிகளை நிறுத்தும் முகமாகவும், அசம்பாவிதங்கள் ஏற்படா வண்ணமுமாகவே இந்தப் பேரணி நிறுத்தப்பட்டுள்ளது

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக மாணவர் இளைஞர் பொதுமன்றம் வேறுபட்ட போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளது, இவர்களின் விடுதலைக்காக நாம் நடத்திய கையொப்பப் போராட்டங்களை இரு அரசுகளுக்கும் அனுப்ப உள்ளோம்,

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [உ]

## சங்குவேலியில் நிவாரணம் பெறுவோர் பட்டியல்

யாழ்ப்பாணம், நவ 4 மீளகுடியமர்தல் நிவாரணமாக ஆயிரம் ரூபா பெறும் குடும்பங்களின் மற்றுமொரு பட்டியல் நேறறு யாழ். செயலத்தினால் வெளியிடபபட்டது.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சங்குவேலி கிராமசேவையாளர் பகுதியைச் சேர்ந்த இருநூற்றி இருபத்திநாலு குடும்பங்கள் இந்தப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

மக்கள் வங்கியின் சுன்னாகக் கிளையின் ஊடாக இந்தக் குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும்

மேற்படி பட்டியல் மக்கள் வங்கிக்கும் சங்குவேலி கிராமசேவையாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## போக்குவரத்து வேறு பாதையில்

யாழ்ப்பாணம் நவ 4 தீவுப்பகுதிக்கானபோக்குவரத்துகள் நேற்று வங்களாவடியுடன் திருப்பி விடப்பட்டன.

வேலணைக்குச்சமீபமாக வீதியில் கண்ணிவெடி ஒன்று புதைத்துவைக்கப்பட்டுள்ளதாகவும், அது மீட்கப்படும் வரை அந்தப்பாதையூடான போக்குவரத்துகள் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

அதை அடுத்து போக்குவரத்துகள் வேறு பாதையூடாகநடைபெற்றன. (ஒ 9)

### காவலூரில்

யாழ்ப்பாணம் நவ 4 ஊர்காவற்றுறைப்பகுதியிலும் நேற்று இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

யாழ் கொட்டடியைச் சேர்ந்த நல்லதம்பி சந்திரசேகர் (வயது 19) என்பவரே கொலையுண்டவராவார். (ஒ-10)

## அமைதிப்.....

யடுத்து இப்பகுதியூடான போக்குவரத்துகள் தடைப்பட்டன.

சம்பவம் நடைபெற்ற இடத்தை அமைதிப் படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் நேற்றுச் சென்று பார்வையிட்டார்.

தாக்குதல்சம்பவத்தை அடுத்து மாங்குளத்திலும் பதற்றம் நிலவியது. படையினரின் தேடுதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டன.

யாழ் நகரிலிருந்து சென்ற வாகனங்கள் அனைத்தும் முறிகண்டியுடன் திரும்பி வந்தன.

ஆனல் வவுனியாவுக்கு அப்பால் இருந்து வந்த வாகனங்கள் புளியங்குளம் நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் ஊடாக மாங்குளம் வந்து பயணத்தைத் தொடர்ந்தன. (ஒ-94-10-9)

## காங்கேசன்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை ஒவ்வொரு வாரமும் பெற்றோர்கள் நேரில் சென்று பார்வையிடுவதற்கு இந்திய அமைதிப் படையினர் முன்னர் அனுமதித்து வந்தனர் என்பது தெரிந்ததே.

(ஒ-10-2002)

## முக்கிய சட்டங்களை நிறைவேற்றிய பின்னரே நாடாளுமன்றம் கலைப்பு

கொழும்பு நவ 4 பிரசாவுரிமைச்சட்டம். தமிழ்மொழியை உத்தியோக பூர்வமொழியாக்கும் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றிய பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியும். இப்படி அரசு தீர்மானித்திருக்கிறது.

கடந்த புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் ஏழுகட்சி முன்னணியுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றி ஜனதிபதி விவரித்தார்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பது குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

முக்கிய சட்ட மூலங்களை நிறைவேற்றுவதற்கு முன் நாடாளுமன்றத்தைக் கலைப்பது பற்றி சிந்திக்கவேண்டியதில்லை என்று சில அமைச்சர்கள் அபிப்பிராயம் தெரிவித்ததாக அறியவருகிறது. (உ-எ)

## மகாசங்கத்தின் யோசனை; கத்தோலிக்க சபை ஆதரவு

கொழும்பு நவ 4 நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மகாசங்கத்தினர் தெரிவித்திருக்கும் யோசனைகளுக்கு கொழும்பு கத்தோலிக்கசபை ஆதரவு தெரிவித்திருக்கிறது.

ஜனதிபதி தேர்தலுடன் நாடளுமன்றத்தேர்தலையும், காபந்து அரசு ஒன்றின் மேற்பார்வையில் நடத்த வேண்டும் என்பது மகாசங்கத்தினரின் பிரதான கோரிக்கையாகும்.

## கொழும்பு பாடசாலைகள் இன்று திறக்கப்படுமாம்

கொழும்பு, நவ 4 கொழும்பு மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் இன்று முதல் மீண்டும் திறக்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சுஉத்தரவிட்டுள்ளது.

மாணவர்களின் கிளர்ச்சி காரணமாக சென்ற மாதம் 13 ஆம் திகதியில் இருந்து சகல பாடசாலைகளையும் மூடும்படி கல்வி அமைச்சு உத்தரவிட்டிருந்தது தெரிந்ததே. (உ-எ)

## அமைதிப்படை தேடுதலில் மீட்கப்பட்ட பொருள்கள்

### உரியவர்கள் பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம் நவ 4 கடந்த முதலாம்திகதி கொக்குவிலில் அமைதிப் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கைகளின் போது திரு சரத்பாபு என்பவரின் வீட்டில் இருந்து கொள்ளை, களவுபோனபலபொருட்கள் மீட்கப்பட்டன. யாழ். நகரக் கமாண்டன்ட் அலுவலகம்விடுத்த செய்திக் குறிப்பில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

டெக்னிக் ஸ்டீரியோ எஸ். எச். 8045, டெக்னிக் சிந்தர் சிஸர் எவ். எம்.-ஏ. எம் -ஸ்டீரியோ டேனர் எஸ்-பி இஸட் 6400, அம்பிளிபயர், பயனியர் ஸ்டீரியோ கஸட் டி. பி. எவ். 750, இரு குருண்டிக் ஸ்பீக்கர் பெட்டி எவ். எம். 1500, இரு வோக்மன் ஸ்பீக்கர்கள், முழு டிஸ்க் யூனிட் ஒன்று எஸ். பி. 88, சோனி ரி. வி.-500744 நஷனல் வீடியோ கஸட் பி 41 ரிஏ015 15, ஒரு சிவப்பு நூவியோ சூட்கேஸ் ஆகியவையே மீட்கப்பட்ட பொருட்கள் என்றும்—

உரியவர்கள் யாழ். மணிக்கூட்டுக் கோபுரப் பகுதியில் உள்ள அமைதிப்படை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## ஆயுதமுனையில்..

(1ம பக்கத் தொடர்ச்சி)

வித்துச் சென்றதாக அறிவிக்கப்பட்டது.

மேற்படி இருவரையும் சிறைக்காவலர்கள் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றபோது வழிமறித்த ஒரு கோஷ்டியினர் அவர்கள் இருவரையும் விடுவித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய் இடம் பெற்றது. (உ-எ)

## காபந்து........

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குமார் பொன்னம்பலத்தை அழைத்துப் பேச்சு நடத்தினர்.

இதனிடையில் சுதந்திரககட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் ஏழு அரசியல்கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சுக்களை நடத்திவந்தார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

## ஏற்கனவே.......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்பது குறிப்பிடத்தக்கது

பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகவிருந்த மாலைதீவு 25 ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரம்பெற்றது. (உ)

## இந்திய.......

நாள் பயணத்தை ரத்துச் செய்து விட்டார்

நேற்றுக்காலை இந்திய அமைச்சரவை அவசரமாகக் கூடி மாலைதீவு நிலவரம் பற்றி ஆராய்ந்தது.

மாலைதீவு ஜனதிபதி கையூம் சென்ற செவ்வாய்க்கிழமை புதுடில்லிக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருந்தார். கடைசி நிமிடத்தில் அது ரத்துச் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது (உ-எ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



K. சிவசுப்பிரமணியம்
(முன்னாள் கிராம அபிவிருத்தி அலுவலர்)

தோற்றம்: 05. 03. 1948 மறைவு: 05. 10 1988

அந்தியேஷ்டி 04. 11. 1988

நல்லாசானாய் பாதுகாவலனாய், பாசம். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு சீர்பெற வளர்த்து மின்னல்போல் எமைவிட்டுப்பிரிந்த தலைவரே! ஆறாத்துயரில் அமிழ்ந்திக் கலங்குகின்றோம் தங்கள் தூய ஆத்மாவின் சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் பல வழிகளிலும் உதவினோர்க்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு அவர்களை 4-11-88இல் நடைபெறவுள்ள கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

மனைவி, மக்களும்
அவருடன் இணைந்துஉருகிப் பிரார்த்திக்கும்;
மாமன்மார், மாமிமார், சிறியதந்தையர், தாய்மார், சகோதரர்களும், உற்றார், உறவினர், நண்பர்களும்.

கிழக்குவாசல்,
இடைக்காடு,
அச்சுவேலி.

(7717)

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து சுப்பிரமணியம்

சரவணமுத்து கனகம்மாவின் அன்புப் புதல்வர் ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா பிரதம கணக்காளர் திரு சுப்பிரமணியம் அவர்கள் வியாழக்கிழமை 3-11-88 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் தம்பு மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, சச்சிதானந்தம், லிங்கேஸ்வரி (France). விமலா, சுமந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அ. செல்வரத்தினம், அ ஆன்மதேவன் அவர்களின் மாமனும். ரதிறூபா, அனுசன் அவர்களின் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 4-11 88 இன்று வெள்ளிக்கிழமை ந. ப 12 மணிக்கு சுன்னாகம் மயானத்தில் நடைபெறும்.

'மிதிலை'
Dr, சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம் மேற்கு.
சுன்னாகம்.

தகவல்:
திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்

(7724)

## முருகேசு நடராசா

திரு. முருகேசு நடராசா (எயர் சிலோன்) முகாமையாளர் மக் றவல்ஸ் (Mack Travels) யாழ்ப்பாணம் காலமாகிவிட்டார். இவர் கனகேஸ்வரி (ஆசிரியை, வட்டு இந்துக் கல்லூரி)யின் அன்புக் கணவரும் முகுந்தன், கஜன ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வநாயகம், கதிரவேற்பிள்ளை, நவரத்தினராசா (முகாமையாளர் ஹற்றன் நசனல் வங்கி), காலஞ்சென்ற விஜயலட்சுமி பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகநாதன், யோகலிங்கம், பேரின்பநாதன், சோமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமச்சடங்குகள் நாளை சனிக்கிழமை (5-11-88) நண்பகல் 12-00 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
மக் றவல்ஸ்
ஸ்தாபனத்தார்.

(C/735)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 04-11-1988 இல்அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Friday 4th November 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org